### தண்ணீர் இருந்தால்தானே விவசாயிகள் விவசாயம் செய்ய முடியும்!

# ஒரு மாத காலத்தில் த.வெ.க. ஆட்சியின் செயல்பாட்டின் சதவீதம் பூஜ்ஜியம்!

## புதுக்கோட்டையில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, ஜுன் 15-
புதுக்கோட்டையில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறியதாவது:-

தண்ணியே இல்லாமல் விவசாய கடன் தள்ளுபடி என்ற ஒரு மோசடி நாடகத்தை முதலில் அரங்கேற்றினார்கள், அதை எதிர்த்து விவசாயிகள் இன்று போராடிக் கொண்டுள்ளனர். அடுத்த நாடகமாக குறுவை சாகுபடிக்கு 134 கோடி ரூபாய் மதிப்பில் தொகுப்பு திட்டம் என அறிவித்துள்ளனர். அதனைப் பார்க்கும்போது வேடிக்கையாக உள்ளது, விவசாயமே செய்யவில்லை வேளாண்மைக்கு தண்ணீர் கிடைக்கவில்லை, உரத்திற்கு மானியம் தருகிறோம், விதைக்கு மானியம் தருகிறோம் என்று சொல்வது வேடிக்கையாக உள்ளது.

தண்ணீர் இருந்தால் தானே விவசாயிகள் விவசாயம் செய்ய முடியும்.

இப்படி ஏமாற்று நாடகங்களையும் பித்தலாட்ட நாடகங்களையும் நடத்திக் கொண்டுள்ளது தான் ப்ரோ முதலமைச்சரின் அரசாங்கமாக உள்ளது.

சகோ, குட்டீஸ்,நண்பா என்று அழைத்து எல்லோரிடமும் ஓட்டு கேட்ட முதலமைச்சர் இன்று விவசாயிகளைப் பார்த்து நண்பா தெரிந்து கொள் உனக்கு தண்ணீர் இல்லை.

நீ தண்ணீர் இல்லாமே விவசாயம் பண்ண கற்றுக் கொள்,

அதுதான் இந்த ஆட்சியின் சிறப்பு என்று சொல்கிற நிலைமையை இந்த ஆட்சியில் பார்க்கின்றோம்.,

**ஆதவ் அர்ஜீனா நாடகம்!**

ஆதவ் அர்ஜுனா எதை கணித்தார், தி.மு.க.விலிருந்து அவர் போய் சேர்ந்தது விடுதலை சிறுத்தைகள் கட்சி,அந்தக் கட்சியில் இடமில்லை என்று சொன்னதும் போறதுக்கு இடம் இல்லாமல் அவர் போனது தமிழக வெற்றிக் கழகத்திற்கு,லாட்டரி சீட்டு நடத்தி அதன் மூலமாக இன்று தமிழக மக்களின் வயிற்று எரிச்சலை கொட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காக,லாட்டரி சீட்டால் பல குடும்பங்கள் தற்கொலைக்கு ஆளாகியுள்ளது,தமிழகத்தில் அதனால் லாட்டரி சீட்டுகள் ஒழிக்கப் பட்டது,ஆனால் அந்த லாட்டரியை இன்றைக்கு மறைமுகமாக கொண்டு வந்து கொள்ளையடிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் ஆதவ் அர்ஜுனா நாடகம் ஆடிக் கொண்டுள்ளார்,

அவரது நோக்கமே தமிழகத்தை கொள்ளையடிக்க வேண்டும் என்பதுதான்,

ஒரு லாட்டரி சீட்டை 10 சீட்டாக போடுவது போல் இன்றைக்கு அவர்கள் செய்து கொண்டுள்ளனர்,

யாரை நம்பி நான் பிறந்தேன் போங்கடா போங்க..

என் காலம் வெல்லும் வென்ற பின்னே வாங்கடா வாங்க. என்ற பாடலைப் போல் தி.மு.க. யாரையும் நம்பி இல்லை.

தனித்து நின்று வெற்றி பெறக்கூடிய திராணி தெம்பு திமுகவுக்கு உள்ளது. திமுக தொண்டர்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். இன்னும் ஆறு மாத காலத்திற்குள் ஆட்சி மாற்றம் வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தமிழக மக்கள் உள்ளனர்,

நாங்கள் ஐந்தாண்டுகள் செய்த சாதனையை மக்கள் எண்ணிப்பார்க்க தவறியதை தற்போது வீட்டில் உட்கார்ந்து நினைத்துப் பார்க்கின்றனர், இனி நினைத்து பார்த்து ஓட்டு போடுவார்கள், அ.தி.மு.க.வின் உண்மையான திரை தி.மு.க. தான் என எடப்பாடி பழனிச்சாமி பேசிய தொடர்பான கேள்விக்கு, எடப்பாடி பழனிச்சாமி எதை வேண்டுமானாலும் பேசி விட்டு போகட்டும்,பத்திரிகையில் செய்தி வரவேண்டும் என்பதற்காக பேசுகிறார் அதை நாங்கள் பொருட்படுத்தவில்லை,

தி.மு.க. திட்டங்களை ரிவிட் செய்துள்ளாரே தவிர புதிதாக ஒன்றையும் டெல்லியில் முதல்வர் சொல்லவில்லை,

**பேரிடர் நிதி என்று தனியாக கொடுக்கவில்லை**

மத்திய அரசு நிதி அளிக்கட்டும் அப்புறம் பார்க்கலாம்,இயற்கை பேரிடர் நிதி என்று ஆண்டுதோறும் ஒரு நிதி கொடுப்பார்கள் அதைத்தான் கொடுத்துள்ள தவிர, தனியாக எதையும் அவர்கள் கொடுக்கவில்லை,

செங்கோட்டையனுக்கு அதுதான் தெரியும் அதைத் தான் சொல்லி இருக்கிறார். வேறு ஒன்றும் புதிதாக சொல்வதற்கெல்லாம் அவருக்கு தெரியாது,

ஆயிரம் கோடி வந்துள்ளது என்று செங்கோட்டையிடனிடம் சொன்னதும், தான் துறைக்கு அமைச்சராக வந்ததும் பணம் வந்துள்ளது என்ற பெருமையில் அவர் சொல்லியுள்ளார்.

ஆனால் அதிகாரிகளிடம் கேட்டுப் பார்த்தால் அந்த உண்மை தெரியும்,

அவர்கள் மத்திய அரசிடம் இணக்கமாக செயல்பட்டால் என்ன? எப்படி செயல்பட்டால் என்ன,

தமிழகத்திற்கு கிடைக்க வேண்டியது கிடைத்தால் சரி. நாங்கள் கேட்ட கல்வி நிதியைத்தானே இப்போது தமிழக முதல்வர் டெல்லியில் கேட்டு உள்ளார்.

நாங்கள் முன்மொழி கல்விக்கு எதிராக போராடினோம். அதனால் அன்று அந்த நிதி நிறுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்ட அந்த 3000 கோடியை தான் இன்றைக்கு உள்ள ப்ரோ முதல்வர் கேட்டுள்ளார்.

10 லட்சம் கோடி ரூபாய் கடன் உள்ளது என்று அருமையான வெள்ளை அறிக்கையை கடந்த பிப்ரவரி மாதம் எங்களது நிதிநிலை அறிக்கையில் நாங்கள் கொடுத்துவிட்டோம். அதைப் படித்துப் பார்த்த பிறகு தமிழகத்தின் இது நிலைமை எப்படி உள்ளது என்பதை தெரிந்து கொள்ள தவறி விட்டார்கள் என்றால் அது அவர்களின் தவறு, அது எங்களின் தவறல்ல.இதற்கு தனியாக வெள்ளை அறிக்கை தர வேண்டிய அவசியம் இல்லை, பட்ஜெட்டை படித்தாலே சாதாரண மக்களுக்கும் புரியும்,

**விஜயின் ரீல்ஸ் ஆட்சி!**

தற்போது விஜயின் ரீல்ஸ் ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டுள்ளது,

மக்கள் மாயையில் ஒரு மோகத்தில் வாக்களித்து விட்டார்கள், எந்த வேட்பாளர் எந்த கட்சி அவர் பெயர் என்ன அவன் நல்லவனா கெட்டவனா அவன் பின்னணி என்ன அவன் எந்த ஊர் காரன் என்று கூட தெரியாமல் வாக்களித்து உள்ளார்கள் என்றால், இதைப் போல ஒரு தேர்தல் நடந்ததாக வரலாறே கிடையாது,

தேர்தல் கூத்து என்று சொல்வதைப் போல அரசியல் கூத்து தான் 2026 தேர்தல். ஆதவ் அர்ஜுனா மட்டுமல்ல ஜான் ஆரோக்கிய சாமி போல இன்னும் 4, ஐந்து பேர்கள் முதல்வரோடு செல்கிறார்கள், முதல்வரின் அலுவலகத்திற்கு பக்கத்திலேயே அவர்களுக்கும் அலுவலகம் கொடுக்கின்றனர்,

ஒருத்தர் முதலமைச்சர் அலுவலகத்திற்கு உள்ளேயே இருக்கிறார் இது போல கூத்தெல்லாம் இன்று தமிழகம் தான் பார்த்துக் கொண்டுள்ளது,

முதல்வருக்கு ஆதவ் அர்ஜுனாவா, ஆரோக்கிய சாமியா யார் தான் ஐடியா கொடுக்கிறார் என்பது தெரியவில்லை..

ஆனால் ஒன்று எதுவுமே நடக்காது அது நன்றாக தெரியும்.

ஒரு மாத காலத்தில் த.வெ.க. ஆட்சியின் செயல்பாட்டின் சதவீதம் பூஜ்ஜியம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி அறித்தார்.

---

### உளுந்தூர்பேட்டை தொகுதியில்

# குடிநீர் பிரச்சினையைத் தீர்த்ததாக ரீல்ஸ் போட்ட த.வெ.க. நிர்வாகிகள்!

## கிராம மக்கள் கடும் எதிர்ப்பு

உளுந்தூர்பேட்டை, ஜுன் 15-
உளுந்தூர்பேட்டை தொகுதியில் குடிநீர் பிரச்னையை தீர்த்ததாக சோபா மாடல் ஆட்சியில் ரீல்ஸ் போட்ட தவெக நிர்வாகிகளுக்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒன்றியம், சேந்தநாடு கிராம ஊராட்சிக்கு உட்பட்டது ஒல்லியாம்பாளையம் கிராமம். இந்த கிராமத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் குடிநீர் பிரச்னை ஏற்பட்டதால் கிராமத்தை சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் உளுந்தூர்பேட்டை திமுக எம்எல்ஏ ஜி.ஆர்.வசந்தவேலுவிடம் குடிநீர் பிரச்னையை தீர்க்க கோரிக்கை வைத்தனர். இதனை தொடர்ந்து திருநாவலூர் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் உடனடியாக பேசி குடிநீர் பிரச்னையை தீர்க்குமாறு கூறினார். இதனை தொடர்ந்து உடனடியாக குடிநீர் பிரச்னை தீர்க்கப் பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டது.

இந்நிலையில் தவெக நிர்வாகிகள் குடிநீர் பிரச்னையை உடனடியாக தங்களது முயற்சியால் சரி செய்யப்பட்டது என வீடியோ காட்சிகள் பதிவு செய்து ரீல்ஸ் போட்டனர். இது தொடர்பாக சமூக வலைதளங்களில் கடும் வாக்குவாதம் நடைபெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் அந்த கிராமத்தை சேர்ந்த ஏராளமான பெண்கள் மற்றும் பொதுமக்கள் குடிநீர் பிரச்னையை தீர்க்க திமுக எம்எல்ஏ வசந்தவேல் தான் உடனடியாக நடவடிக்கை எடுத்தார் என்றும், தவறான தகவல் போட்டு ரீல்ஸ் போட்ட தவெக நபர் உடனடியாக கிராமத்திற்கு வரவேண்டும் என போனில் பேசி கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து இதுபோல் ரீல்ஸ் போட்டு வந்தால் போராட்டம் நடத்துவோம் என கூறியதால் உளுந்தூர்பேட்டை பகுதியில் சோபா மாடல் ஆட்சியில் ரீல்ஸ் போடும் விளம்பர குறிப்பிற்கு கிராம பொதுமக்கள் பதிலடி கொடுத்த இந்த சம்பவம் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.



கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர், பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் கே.நித்தியனந்தன் உட்பட சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

### தலைவரின் வெற்றியைப் பறித்த – கழகத்தின் தோல்வியை ஏற்க முடியாமல்

# தொண்டர்கள் தினமும் தலைவரைச் சந்திக்கும் நிகழ்வு நெகிழச் செய்கிறது!

## தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் – தங்கம் தென்னரசு ட்விட்டர் பதிவு!



சென்னை, ஜுன் 15-
நடந்து முடிந்த தேர்தலில் தலைவர் அவர்களின் வெற்றி பறிக்கப்பட்டதையும், கழகத்தின் தோல்வியையும் சிறிதும் ஏற்றுக் கொள்ள முடியாத கழகத் தொண்டர்கள் பல ஆயிரம் மைல் தூரத்திலிருந்து சென்னைக்கு வந்து கழகத் தலைவரை தினந்தோறும் சந்தித்து ஆறுதல் பெறும் நெகிழ்ச்சியினைக் கண்டு விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான தங்கம் தென்னரசு தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அவரது ட்விட்டர் பதிவு வருமாறு :-

**கழகத்தின் தோல்வியை, குறிப்பாக தங்களின் வெற்றி பறிக்கப்பட்டதை சிறிதும் ஏற்றுக்கொள்ள முடியாமல் மனம் மறுகி, நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து சென்னைக்கு வந்து, தங்களின் முகம் கண்டு ஆறுதல் அடைந்து, இப்படி உணர்ச்சி வெள்ளத்தில் தங்களை ஆழ்த்திக்கொள்ளும் உடன்பிறப்புகள் தான் அறிவாலய வாசலில் தினந்தோறும் ஆயிரக்கணக்கில் குவிகிறார்கள். தங்களை ஒரு நொடியேனும் பார்த்துவிட்டு, தங்களின் உணர்வைக் கொட்டி விட்டுப் போகவே வருகிறார்கள்.**



**தாங்களும் முகம் கோணாமல். சலிக்காமல் அவர்களுக்கு ஆறுதல் சொல்வதைப் பார்த்தேன். தாயின் பரிவையும், தலைவனின் தன்னம்பிக்கையினையும் கழகத் தோழர்களுக்குச் சேர்த்துத் தந்தீர்கள். கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் கூட என்னை அருகில் அழைத்து, தாங்கள் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நின்றபடி ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட முறையில் பேசி, ஆறுதல் தெரிவித்து, அவர்களுக்குச் செவி மடுத்து, அவர்கள் கொண்டு வரும் புத்தங்களில் அன்போடு கையெழுத்திட்டு, புகைப்படம் எடுத்து அனுப்பி வைக்கின்ற பண்பினையும், ஈடுபாட்டினையும் வியந்து சொன்னார். அதைக் கேட்டு மனம் நெகிழாமல் இருக்குமா?**

**இவ்வளவு பேரையும் பார்ப்பதில் தங்களுக்கு இருக்கும் சிரமத்தை நாங்கள் உணர்ந்து இருந்தாலும், தாங்கள் அதனைப் பொருட்படுத்தாமல் இன்முகத்துடன் பேசி வழியனுப்பியதைப் பார்த்து ஒரு வகையில் பூரித்தும் போனோம்.**

**கழகத்தைக் கட்டிக் காக்கும் நீங்கள் இப்போது தட்டியும் எழுப்பி இருக்கின்றீர்கள், தலைவரே! நம்மை எதிரிகள் வெட்ட வெட்ட, பேரறிஞரும் முத்தமிழறிஞரும் தட்டிக் கொடுத்து வளர்த்தெடுத்த கழகத்தின் ஓர்மையை தங்களின் வழியாகக் காண்கிறோம். காலம் தன் புன்னகையை தங்களை நோக்கி வீசுகின்றது, தலைவா!**

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

---

### சிவகங்கையில் பெண் போலீசுக்கு

# பாலியல் தொல்லை கொடுத்த மூன்று பேர் கைது!

சிவகங்கை .ஜுன் 15-
சிவகங்கை நகர் ஆயுதப் படை போலீஸில் 30 வயது பெண் போலீஸ்பணியாற்றி வருகிறார் . இவர் திருமணம் ஆனவர் .இவருக்கும் ராபின் என்ற லாரி டிரைவருடன் நீண்ட நாட்களாக பழக்கம்உள்ளது. ராபின் நேற்று முன்தினம் மாலையில் பெண் போலீசாருக்கு போனில் தொடர்பு கொண்டு உங்களை அவசரமாக சந்திக்க வேண்டும் என்று கூறினார்.

திருப்பத்தூர் சாலையில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருமாறு கூறினார். அதை நம்பிய அந்த பெண் போலீஸ் இரவில் திருப்பத்தூர் சாலையில் சென்று கொண்டிருந்த பொழுது அவரது நண்பர் ராபின் பேசியவாறு நல்ல இருள் சூழ்ந்த பகுதிக்கு அழைத்துச் சென்றார். பேசிக் கொண்டிருந்த வாறு பெண் போலீசாரிடம் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். அதே நேரத்தில் அங்கு மேலும் வந்த இரண்டு பேர்கள் சேர்ந்துமூன்று பேரும் பெண் போலீசை பாலியல் தொல்லை கொடுக்க ஆரம்பித்தார்கள். இதனால் கூச்சலிட்டபடி பெண் போலீஸ் அவர்களிடமிருந்து தப்பி ஓடி அருகில் உள்ள வீட்டில் தஞ்சம் அடைந்தார். வீட்டில் உள்ளவர்களிடம் மூன்று பேர் தன்னிடம் நடந்து கொண்டதை கூறி உள்ளார்.

அவர்கள் இந்த மூன்று பேரையும் பிடிக்க சென்ற பொழுது அந்த மூன்று இளைஞர்கள் தப்பி ஓடி விட்டார்கள் .இது குறித்து 100 அவசர போலீஸிற்கு கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தகவல் கொடுக்கப் பட்டது. அந்த பகுதியில் ரோந்து சென்றிருந்த அவசர போலீஸ் விரைந்து வந்து பெண் போலீசாரை மீட்டனர்.

தொடர்ந்து அவர்கள் மாவட்ட எஸ்பி சிவபிரசாத்திற்கு தகவல் கொடுத்தனர். மாவட்ட எஸ்பி சிவப்பிரசாத் உத்திரவின் பேரில் சிவகங்கை டி.எஸ்.பி .அமல அட்வின் ம களிர் காவல் நிலைய ஆய்வாளர் மாரிஸ்வரி ஆகியோர் இது குறித்து விசாரணை நடத்தி மூன்று பேரை கைது செய்தார்கள். இதில் திருப்புவனம் தாலுகா துதை கிராமத்தை சேர்ந்த லாரி டிரை வர்ராபின், 28 சித்தாலங்குடியைச் சேர்ந்த த.வெ.க. பிரமுகர் மகா ராஜா வயசு 29 கல்லூரி மாணவன் ஹரிஷ் 21ஆகிய மூன்று பேரை கைது செய்துள்ளார்கள்.

இதில் ராபின் பெண் போலிசுடன் நெருங்கி பழகியதாக கூறப்படுகிறது. இந்த மூன்று பேரும் பெண் போலீசாரை எதற்காக அழைத்து இத்தகைய பாலியல் செயலில் ஈடுபட்டது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள். தலைநகரில் பெண் போல் சாரருக்கு ஏற்பட்ட இந்த பாலியல் சம்பவம் இப்பகுதியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

---

### பொள்ளாச்சியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்

# பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை பணி!

## நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு!

பொள்ளாச்சி, ஜுன் 15-
பொள்ளாச்சியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகை கட்டுமான பணியை நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வர சாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்பட்ட பகுதியில், பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை கட்டுவதற்கான நடவடிக்கை இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சராக விளங்கிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கடந்த திராவிட மாடல் ஆட்சியில் எடுக்கப்பட்டு ஆய்வு மாளிகை கட்டுவதற்கு ரூ.2 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டது. இதையடுத்து கடந்த 8 மாதத்திற்கு முன்பு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை கட்டு மான பணி துவங்கியது. தொடர்ந்து அந்த பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் ஆய்வு மாளிகை கட்டுமான பணியை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது, பணியின் தரம் குறித்தும் அவர் கேட்டறிந்தார். மேலும் கட்டுமான பணியை விரைந்து நிறைவுசெய்து திறப்பு விழாவுக்கு தயார்படுத்த வேண்டும் என பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது பொள்ளாச்சி நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன் உள்பட அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.



மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற இரா.ஜெயராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. மலைவாழ் மக்கள் வசிக்கும் குருமலை, குழிப்பட்டி, மேல் குருமலை, பூச்சி கொட்டாம் பாறை உள்ளிட்ட பகுதிகளில் மலைவாழ் மக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் உடுமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் தி.செழியன், துணை செயலாளர் ராம்குமார், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் கே.கதிரேசன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் மோகன் மற்றும் கோபால், அருண், துர்க்கீஸ்வரன், மகேந்திரன், ராஜ்குமார், நடராஜ், செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.